| நம்மையும் நாட்டு மக்களையும் காப்போம் | தொற்றிலிருந்து தமிழகத்தை மீட்போம் |
| --- | --- |

செ.வெ.எண்:42 நாள்: 29.06.2021

**கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாலேப்பள்ளி, வரட்டணப்பள்ளி மற்றும் நாரலப்பள்ளி ஆகிய ஊராட்சிகளில், இன்று (29.6.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்ட பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் பர்கூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாலேப்பள்ளி ஊராட்சியில் ஊரக வளர்ச்சித்துறை சார்பாக மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (2020-2021) தலா ரூ.3 இலட்சம் வீதம் 10 பசுமை வீடுகள் என ரூ.30 இலட்சம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டு வரும் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், மழைவாழ் மக்களிடம் அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார். வீடுகள் கட்டுமான பணிகள் ஒரு மாத காலத்திற்குள் முடித்து மழைவாழ் மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கவும், முதியோர் உதவித்தொகை மற்றும் பல்வேறு கோரிக்கைகள் குறித்து மனு அளித்தவர்களுக்கு மனுக்களை ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, வரட்டணப்பள்ளி ஊராட்சியில் வேளாண்மைத்துறை சார்பாக கூட்டுப்பண்ணை திட்டத்தின் கீழ் உழவர் உற்பத்தி குழுக்களுக்கு ரூ.5 இலட்சம் மானிய விலையில் பவர்டில்லர், நெல்அறுவடை இயந்திரங்கள், கழை எடுக்கும் கருவிகள் உள்ளிட்ட வேளாண் கருவிகளை வழங்கினார். வேளாண் கருவிகளை பெற்றுக்கொண்ட விவசாயிகளிடம் வேளாண் கருவிகளை தங்கள் பகுதியில் உள்ள விவசாயிகள் பயன் பெறும் வகையில் நல்ல முறையில் பயன்படுத்தி, வேளாண் கருவிகளை நல்ல முறையில் பாராமரிக்க அறிவுறுத்தினார்.

மேலும், நாரலப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட சிந்தகம்பள்ளி கிராமத்தில் தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக ரூ.54,500 மதிப்பில் 100 சதவிகித மானியத்தில் நுண்நீர் பாசன திட்டத்தின் கீழ் (சொட்டு நீர் பாசனம்) விவசாயி திரு.முனியப்பன் என்பவர் 1- ஏக்கர் நிலப்பரப்பில் சாமந்தி பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, விவசாயிடம் பூக்கள் சாகுபடி மற்றும் விற்பனை குறித்து கேட்டறிந்தார். தோட்டக்கலைத்துறை சார்பாக உரிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சாகுபடிகளை அதிகரித்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் விவசாயிகளிடம் கேட்டுக்கொண்டார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**

| | |
|---|---|
| முககவசம் அணிவீர் | தனி மனித இடைவெளி கடைப்பிடிப்போம் |